**கவனிக்க**.- *2008.06.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1556 - 2008 ජූනි 27 වැනි සිකුරාදා - 2008.06.27

*1556 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 647 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 646 | ஏல விற்பனைகள் | 649 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூலை 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூன் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பிரிவு

பொருட்கள் ஏல விற்பனை

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் பாவனையிலிருந்து ஒதுக்கிய கீழ்க்காணும் அட்டவணையில் உள்ள பொருட்கள் 2008.07.11 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு வவுனியா பொலிஸ் வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. ஏல விற்பனைக்குரிய பொருட்களை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியுடன் 2008.07.10 ஆந் திகதியன்று காலை 9.30-10.30 க்கிடையில் பார்வையிட முடியும்.

3. இப்பொருட்களில் எவற்றையேனும், அவற்றின் விலைகள் கோரப்படாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உரிமை உண்டு.

4. ஏல விற்பனையின்போது பொருட்களைப் பெற்றவர் அதற்குரிய பணத்தினை காசாக மாத்திரம் செலுத்த முடியும். காசோலைகளோ அல்லது காசுக்கட்டளைகளோ ஏற்கப்படமாட்டாது.

5. பொருட்களை வாங்கியவர் அப்பொருட்களை அதே தினத்தில் மாலை 3.00 மணிக்கு முன்பாக பொலிஸ் வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

6. பொருட்களை ஏலத்தில் வாங்குவதற்கு வருபவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

பேர்னாட் ஓ. ஏ. டீ சில்வா,
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்,
வவுனியா பிரிவு.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம்,
வவுனியா பிரிவு,
2008.06.04.

### அட்டவணை

### ஏலத்திற்குரிய பொருட்கள் விபரம்

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தீ அணைக்கும் உபகரணம் | 02 |
| 2. | இரும்பு அறுக்கும் வாள் | 21 |
| 3. | குழல் மின் விளக்கு (செட்) | 03 |
| 4. | அலுமினியம் தாச்சி | 17 |
| 5. | அதிகுளிர்ப் பெட்டி | 03 |
| 6. | அரிக்கன் அலுமினியம் | 03 |
| 7. | பானை அலுமினியம் | 07 |
| 8. | கைவாள் | 20 |
| 9. | இரும்புக் கட்டில் (சோடி) | 07 |
| 10. | இரும்புக் கட்டில் பட்டம் | 74 |
| 11. | இரும்புக் கட்டில் தட்டு | 33 |
| 12. | அலவாங்கு | 07 |
| 13. | அலுமினியம் குவளை | 09 |
| 14. | பூட்டு | 04 |
| 15. | மண்வெட்டி | 82 |
| 16. | பூங்கா விளக்கு | 12 |
| 17. | கிடாரம் அலுமினியம் 14" | 59 |
| 18. | கிடாரம் அலுமினியம் 16' | 105 |
| 19. | கிடாரம் அலுமினியம் 18" | 11 |
| 20. | கிடாரம் அலுமினியம் 22" | 21 |
| 21. | கிடாரம் அலுமினியம் 26" | 05 |
| 22. | கிடாரம் அலுமினியம் 32" | 15 |
| 23. | கிடாரம் அலுமினியம் 34" | 13 |
| 24. | கிடாரம் அலுமினியம் 36" | 06 |
| 25. | கிடாரம் அலுமினியம் 24" | 38 |
| 26. | கத்தி | 30 |
| 27. | கிடாரம் அலுமினியம் 20" | 01 |
| 28. | தொலைக்காட்சி கெமரா | 01 |
| 29. | ஒலிப்பதிவு யந்திரம் | 01 |
| 30. | வாயு அடுப்பு | 03 |
| 31. | வாயு அடுப்பு (குக்கர்) | 02 |
| 32. | தீ அணைக்கும் உபகரணம் | 02 |
| 33. | வானொலிப் பெட்டி | 01 |
| 34. | இடறி ஆளி | 02 |
| 35. | குழல் மின் விளக்கு (செட்) | 242 |
| 36. | நகன் விளக்கு | 64 |
| 37. | நகன் விளக்குக்குரிய 'வாசர்' | 22 |
| 38. | நகன் விளக்குக்குரிய 'கோல்டர்' | 04 |
| 39. | அரிக்கன் சட்டி | 01 |
| 40. | மண் அள்ளும் தாச்சி | 04 |
| 41. | தராசு | 02 |
| 42. | அலுமினியம் தாச்சி | 08 |
| 43. | இரும்பு அலுமாரி | 02 |
| 44. | தட்டச்சு இயந்திரம் (சிங்களம்) | 04 |
| 45. | தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்) | 03 |
| 46. | இரும்பு வளையம் | 01 |
| 47. | தொலைக்காட்சிப் பெட்டி (நிறம்) | 02 |
| 48. | றாக்கை | 08 |
| 49. | கசெட் வானொலி | 03 |
| 50. | தொலைக்காட்சிப் பெட்டி (கறுப்பு வெள்ளை) | 04 |
| 51. | லாந்தர் விளக்கு | 123 |
| 52. | நீர் வடிகட்டி | 120 |
| 53. | நீர் கொதிகலன் | 31 |
| 54. | வீச்சுக் கத்தி | 91 |
| 55. | மின் கேத்தல் | 25 |
| 56. | தள்ளுவண்டி | 02 |
| 57. | மின்வாள் | 02 |
| 58. | மின் தேங்காய் துருவி | 01 |
| 59. | மேசை மின் விசிறி | 36 |
| 60. | நீர்க்குழாய் | 01 |
| 61. | உருக்கு அலுமாரி | 01 |
| 62. | நீரிறைக்கும் யந்திரம் (மின்) | 09 |
| 63. | நீரிறைக்கும் யந்திரம் | 06 |
| 64. | மின் பிறப்பாக்கி பற்றரி | 01 |

| | | |
|---|---|---|
| 65. | மின்சார ஆளி | 01 |
| 66. | உருக்கு போப்பு அலுமாரி | 05 |
| 67. | உருக்கு மேசை | 01 |
| 68. | மின் விசிறி | 01 |
| 69. | உருக்கு அலுமாரி | 22 |
| 70. | சவல் | 08 |
| 71. | கொதிகலன் | 01 |
| 72. | மேசைத் துருவலகு | 18 |
| 73. | கலஜன் விளக்கு 500 | 17 |
| 74. | கலஜன் விளக்கு 1000 | 02 |
| 75. | அவசரகால விளக்கு | 02 |
| 76. | வீதிச் சோதனை உபகரணம் | 18 |
| 77. | மேசைக்கத்தி | 03 |
| 78. | தேனீர் குவளை | 09 |
| 79. | பான் லயிட் | 01 |
| 80. | அலுமினியம் ஜொக்கு | 08 |
| 81. | சுழல் நாற்காலி | 01 |
| 82. | உருக்கு குசன் கதிரை | 24 |
| 83. | இரும்புக் கதிரை | 76 |
| 84. | மேசைக் கத்தி | 60 |
| 85. | மன்னாக்கத்தி | 54 |
| 86. | துளைகருவி | 15 |
| 87. | துவிச்சக்கரவண்டி | 74 |
| 88. | கோடரி | 50 |
| 89. | அமுக்க விளக்கு | 09 |
| 90. | உருக்கு புத்தக அலுமாரி | 01 |
| 91. | கைவாள் | 01 |
| 92. | நிக்கல் கட்டு (றே) | 04 |
| 93. | வாளி | 107 |
| 94. | மின்கலம் 70 அம். | 02 |
| 95. | பிலென்டர் | 01 |
| 96. | மின்கலம் 12 | 01 |
| 97. | ஒளிப்படப் பிரதி யந்திரம் | 01 |

6-563

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப் பட்ட தனியார் நிறுவனம், 2008, மே 21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் அறியத்தருகின்றோம்:-

கம்பனியின் பெயர் : நான் சகால் (பிறைவேற்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 64148
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : 61, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1

கார்சன் மனேஜ்மன்ற் சேர்விசஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

6-473

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவாக அறிவித்தல்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 29.05.2008
கம்பனியின் பெயர் : ஜீ. எம். ரீ. பினாஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 64268
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : 103டி அலுத்கம, மோகமுவ, யக்கல
செயலாளர்கள் : வரையறுக்கப்பட்ட எல். எம். மனெஜ் மென்ட்சேவிசர்ஸ் (தனியார்) நிறுவனம்

6-476

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சனோஜ் இன்டநெஷனல் (பிறைவேற்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பி. வி. 63698
திகதி : 2008.04.07
கம்பனியின் பதிவு அலுவலகம் : 31/2, பண்ட் றோட், ஹெந்தல, வத்தளை

டபிள்யூ. டபிள்யூ. சி. யூ. செனரத்.
பணிப்பாளர்.

6-478

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

கம்பனியின் பெயர் : பிரீமியர் இன்டர்நெசனல் ட்ரேடிங் (தனியார்) வரையறுக்கப்பட்டது
கம்பனியின் பதிவு இல. : PV 63943
பதிவு செய்த திகதி : 29.04.2008
கம்பனியின் விலாசம் : இல. 33/1, ப்லாஸா கொம்லெக்ஸ், கொழும்பு - 06

ஜே. அன்ட் ஏ. மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது

கம்பனி செயலாளர்.

6- 486

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்**

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவு செய்தல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது:-

*கம்பனியின் பெயர் :* அமாரி வோடர்கேட் (பிறைவேற்) லிமிட்டெட்.
*கம்பனியின் பதிவு இல. :* பி. வி. 64089
*பதிவு செய்த திகதி :* 14.05.2008
*கம்பனியின் விலாசம் :* இல. 335 ஏ, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு - 10

ஜே. அன் ஏ. மனேஜ்மன்ட் சிஸ்ட்ம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது,
கம்பனி செயலாளர்.

6- 487

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன் கீழ் பொதுமக்களுக்கு விடுக்கப்படுகின்ற அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத் தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* ஆர். சீ. கன்ஸ்டிரக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.
*கம்பனியின் இலக்கம் :* பி. வி. 64203
*பதிவான திகதி :* 2008, மே 26
*பதிவு செய்த அலுவலகம் :* இல. 107, கந்தகுருந்துவத்தை, தெடியாவல, களுத்துறை வடக்கு.

*கம்பனியின் பெயர் :* ஜே. ஆர். அய். மார்கட்டிங் (பிரைவேட்) லிமிட்டெட்.

*கம்பனியின் இலக்கம் :* பி. வி. 64255
*பதிவான திகதி :* 2008, மே 28
*பதிவு செய்த அலுவலகம் :* இல. 34, பீ. ஏ. பர்னாந்து மாவத்தை, கொரகபொல, பாணந்துறை.

கே. எஸ். செக்ரடரீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
(கம்பனியின் செயலாளர்கள்),
இல. 578, காலி வீதி, பாணந்துறை.

6- 491

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் விதிகள் பிரகாரம் 2008, மே 29 ஆந் திகதி ஸ்மார்ற் ஆர் எஃப் க்ளோபல் (பிரைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்ட தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* ஸ்மார்ட் ஆர் எப் குளோபல் (பிரைவேட்) லிமிட்டெட்.
*கூட்டிணைப்பு இலக்கம் :* பி. வி. 64244
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 45/15, நாவல ரோட். ஹெட மெதுர, கொழும்பு 05.

சபையின் கட்டளைப் பிரகாரம்,
வனிக் கோர்பரேற் சேர்விசஸ்
லிமிட்டெட்.
கம்பனி செயலாளர்கள்.

6- 565

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியானது 07.10.2007 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* வுமென்ஸ் சப்போர்ட் குரூப்

*கம்பனியின் இலக்கம் :* G. A. 2096

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 112, ஸ்ரப்பொர்ட் அவெனியூ, கொழும்பு 06.

பிரேமச்சந்திர எபா,

கம்பனி செக்ரெட்டரி.

6- 562

---

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கொழும்பு 7, ஹேவா அவனியு, இல. 2ஏ இல் தற்போது வதியும் முன்னர் கித்துல்கலையில் வசித்த மஹசென் லக்ஷ்மன் இராஜகருணாவாகிய என்னால், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எச். பீ. பெரேரா அவர்களால் 1973, பெப்புருவரி 28 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு, கித்துல்கல வில்மட் இராஜகருணா அவர்களுக்கு வழங்கப்பட்ட அட்டோர்ணித்தத்துவ இலக்கம் 1436 ஐ இரத்துச் செய்வதாய் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன். என் சார்பில் சொல்லப்பட்ட வில்மட் இராஜகருணா அவர்களால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

மஹசென் லக்ஷ்மன் இராஜகருணா.

2008, மே 27.

6- 598

# ஏல விற்பனைகள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - தெஹிவளை கிளை

(முன்னர் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் எனப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஹற்றன் நஷனல் வங்கிகளால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். டீ. சரத்சந்திர அவர்களால் 2004.12.13 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1438 இல் துண்டு 1எனக் குறிக்கப்பட்ட அம்பகஹவத்த அல்லது மஹவத்த மற்றும் கடவலவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்துமுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிற்றி கோரளை பள்ளேபற்றுவில் கெஸ்பாவ பிரதேச சபை எல்லைக்குள் பொரலஸ்கமுவ உப அலுவலக பெல்லந்தரவில், இரண்டாவது முறி இல. 2347 இல் விவரிக்கப்பட்ட துண்டு 4 இல் குறிப்பிடப்பட்ட பாதைக்கான உரிமையுடன் அமைந்துள்ளது.**

**( காணியின் விஸ்தீரணம் : 13.65 பேர்ச்சஸ்)**

*(கடமைப்பட்டவர்களும் சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைத்தவர்களுமான அப்துல் காதர் மொஹமட் ஹாதி ஷெஹாம், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்த்தன அவர்களால் முறையே 2005.02.03 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட முறி இல. 2347 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்கள்).*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேலே விபரிக்கப்பட்ட சொத்தை, அதே இடத்தில் 2008.07.15 மு. ப. 11.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்குத்**-தயவு செய்து 2007.09.07 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.10.02 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின", மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-சித்திகரமான கொள்வனவாளர், ஏலத்தின் இறுதியில், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்கான ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாகக் கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூ. 2,000;
(5) கிளார்க், கூவுவோர் வேதனமாக ரூ. 500 ;
(6) மொத்த விளம்பரச் செலவு.

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90%, விற்பனைத் திகதியிலிருந்து ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- காணி உறுதி மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் தொடர்பாக "ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, தலைமையக கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் பிரிவு, பிரதம முகாமையாளர்" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 2661815, 2661816.

ரஞ்ஜித் எஸ். மஹநாம,
(சமாதான நீதவான் - அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர், ஏலதாரர்.

மஹநாம ட்றைவ்,
474, பிட்ட கோட்டே,
கோட்டே,
தொலைபேசி : 2863121.

6-560

---

## செலான் வங்கி பீஎல்சீ வீ நீர்கொழும்பு கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுக்காரியாலய எல்லைக்குட்பட்ட தம்மிட்ட நகர சபை எல்லைகள் 46 பிரிவில் வேபொடை வீதியில் துண்டு இல. 2ஏ மற்றும் 2பி வரைவு இல. 6509/1994 மற்றும் 1994.10.10 ஆந் திகதியும் மற்றும் 1995.10.20 ஆந் திகதியும் கொண்ட காணி துண்டு சீ2 வரைவு இல. 5 பி இல் கொஸ்கஹாவத்தை என்றழைக்கப்படுகின்ற பெறுமதிவாய்ந்த பத்து பேர்ச் (0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்ட காணி, கட்டிடங்கள், மரம், செடி, கொடிகள் உள்ளிட்டு அங்கு காணப்படுகின்ற அனைத்தையும் கொண்டுள்ள, துண்டு இல. ஏ247/76 நீர்கொழும்பு காணிப் பதிவுக் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான காணி ஏல விற்பனை**

*(கடன்பட்டார் என்ற வகையில் விற்பனை உரிமையாளர் இல. 5பி, வேபொடை வீதி, நீர்கொழும்பு எனும் முகவரியில் வசிக்கும் திரு, போத்தலகே லெஸ்லி ஜெரோம் பர்னாந்து என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)*

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2008, யூலை மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன். தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு தயவு செய்து 2005.07.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2005.07.20 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- நீர்கொழும்பிலிருந்து கட்டுவபிட்டிய பாதையில் சென்று கொழும்பு சிலாபம் வீதியில் பிரிந்து "பால்தி" சந்தி ஊடாக செல்லல் வேண்டும். சுமார் 700 மீட்டர் வரை இப்பாதையில் சென்று வலது புறமாகத் திரும்பி வேபொட வீதி வழியாகச் சென்று பின் மீண்டும் இடதுபுறம் திரும்பி சுமார் 175 மீட்டர் கட்டுவாபிட்டிய வீதியில் சென்று இக்காணியைச் சென்றடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%),
(2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%),
(3) ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%),
(4) விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000,
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500,
(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு,
(7) கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி பீஎல்சீ, உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2456284, 2456285, 2456263.

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940

6-566

---

## DFCC வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் மற்றும் மோட்டார் வாகன ஏல விற்பனை**

**2075 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்**

**வட மத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் கலன்பிந்துணுவெவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உட்டியன்குளம் கோரளேயில் இருக்கும் துட்டுவெவ கிராமத்தில் அமைந்திருப்பதும், 04.02.1999 எனத் திகதியிடப்பட்ட 373 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டு, பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையாவால் மீளக் குறிக்கப்பட்டு 22.02.2005 எனத் திகதியிடப்பட்டதும் துட்டுவெவஹேன என அழைக்கப்படுவதுமான காணித்துண்டு.**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 00றூ. 00பே.)**

**கட்டடங்களும் அதன் மீது நிறைந்திருக்கும் அனைத்தும் உள்ளடங்கியதாக**

*(நிமல்சிரி மோட்டார் ஸ்டோர்ஸ் என்ற பெயரிலுள்ள நிறுவனத்தை உரிமைத்துவத்துடன் நடத்திவரும் கலன்பிந்துணுவெவயைச் சேர்ந்த கிரிபண்டாகே நிமல் விஜேதிலகவால், அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. என். ஏ. குரேரா அவர்களால் 2005, பெப்புருவரி 24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 2075 ஆம் இலக்க ஈட்டுப்பிணை உறுதி மற்றும் 2005, பெப்புருவரி 24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 2076 ஆம் இலக்க ஈட்டுப் பிணை உறுதி ஆகியவற்றின் மூலமாக DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து.)*

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி,

இந்த ஆதனம்.- 2008, யூலை 16 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஸ்தலத்தில் எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

2076 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விவரம்.

| வாகன இலக்கம் | வகை தயாரிப்பு, இனம் குதிரைவலு முதலியன | அடிச்சட்ட இலக்கம் | இஞ்ஜின் இலக்கம் | வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 251- 4961 | ISUZU மோட்டார் வான் | WFS62FV7109906 | 4FG1607247 | கெக்கிராவ வீதி, கலன்பிந்துணுவெவ |

அதே தினத்தன்று முற்பகல் 11.30 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை நடைபெறும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 34,610 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்டவர்களும்ஐஎஸ்ஓ 9001 : 2000 ஆம் இலக்க தராதரச் சான்றிதழ் பெற்றவர்களுமான
பிரபல முன்னோடி பட்டய ஏல விற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி ஆதன முகவர்.

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2227593
தொலைபேசி/ஃபக்ஸ் இல. : 081-2224371
மின்-அஞ்சல் : schokmankandy@sltnet. lk

நகர அலுவலகமும் காட்சியறையும் :
290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 5.
தொலைபேசி இல. : 011-2502680, 2585408
தொலைபேசி/ஃபக்ஸ் இல. : 011-2588176
மின்-அஞ்சல் : schokman@ samera1892.com

6-546